MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on **04.08.2023** (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| | 04.08.2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு<br>நடைபெற்ற சாதாரணக்கூட்டம்<br>முன்னிலை**:** திரு.உ.முகமதுயாசின்**,** நகர்மன்றத்தலைவர் | |
| 316 | **மன்றப்பொருள் எண்.1**<br><br>**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு ஜூலை2023 முதல் கீழ்க்கண்ட விபரப்படி மதிப்பூதியம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ள சென்னை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண்.98 நாள்.13.07.2023 மன்றத்தின் பார்வைக்கு.**<br><br>**1) நகர்மன்றத்தலைவர் – ரூ.15000/-மட்டும்**<br>**2) நகர்மன்றத்துணைத்தலைவர் –ரூ.10000/-மட்டும்**<br>**3) நகர்மன்ற உறுப்பினர்கள்- ரூ.5000/- மட்டும்.**<br>**அலுவலகக்குறிப்பு**<br><br>**அனுமதிக்கலாம்.**<br><br>**(கோப்பு எண்.1433/2023/சி1)** | அனுமதிக்கப்பட்டது. |
| 317 | **மன்றப்பொருள் எண்.2**<br><br>**நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.4313/2021/அ3 நாள்.17.05.2023 அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியபடி, மேலூர் நகராட்சியில் என் குப்பை என்பொறுப்பு , மக்கும் குப்பை, மக்காத குப்பை, பிளாஸ்டிக் ஒழிப்பு , வீட்டுக்கொரு கழிவறை, டெங்குகாய்ச்சல், மழைநீர் சேகரிப்பு போன்றவற்றிற்கான விழிப்புணர்வுகளை பொதுமக்கள் மத்தியில் கலை நிகழ்ச்சிகள் மூலம் நடத்திட திருமதி.ஜே.விமலா, வெங்கடாஜலபதி நாடகசபா சென்னை அவர்களுக்கு 16.06.2023, 17.06.2023 ஆகிய இரு தினங்களில் கலை நிகழச்சிகள் நடத்திட நிகழ்ச்சி ஒன்றுக்கு ரூ.7500/- வீதம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க எனவே கீழ்க்கண்ட இடங்களில் கலைநிகழ்ச்சிகள் நடத்தவும், திருமதி.ஜே.விமலா வெங்கடாஜலபதி நாடகசபா சென்னை அவர்களுக்கு செலவினம்** | அனுமதிக்கப்பட்டது. |

**ரூ.30000/-ஐ வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.**

| **வ.எண்** | இடம் | தேதி | நேரம் |
|---|---|---|---|
| **1)** | வார்டு 16,பேருந்துநிலையம் | 16.06.2023 | 4.00 மணி முதல் 6.00மணிவரை |
| **2)** | வார்டு 16, மூவேந்தர் பண்பாட்டு கழகம் | 16.06.2023 | 6.30 மணி முதல் 8.00மணிவரை |
| **3)** | வார்டு 5, சந்தைபேட்டை | 17.06.2023 | 9.00மணி முதல் 11.00 மணி வரை |
| **4)** | வார்டு 19, அரசு மருத்துவமனை | 17.06.2023 | 11.30 மணி முதல் 1.00 மணிவரை |

**அலுவலகக்குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

318

**<u>மன்றப்பொருள் எண்.3</u>**

**இந்நகராட்சி பொதுச்சுகாதார பிரிவு வண்டி எண்.TN59CV9010 கழிவுநீர் வாகனத்திற்கு 2023-2024ம் ஆண்டிற்கான சாலைவரியை மேலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்துவதற்கான செலவினத்தொகை ரூ.19500/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.**

**அலுவலகக்குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

அனுமதிக்கப்பட்டது.

319

**<u>மன்றப்பொருள் எண்.4</u>**

**மேலூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு வாகன காப்பீடுத் தொகை ரூ.112964/- செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.**

| **வ.எண்.** | **வாகன எண்.** | **தொகை ரூ.** |
|---|---|---|
| **1** | **TN59 CY 8136** | **19562** |
| **2** | **TN59 CY 8167** | **19562** |
| **3** | **TN59 CY 8113** | **19562** |
| **4** | **TN59 CY 8200** | **20230** |
| **5** | **TN59 CY 9536** | **34048** |
| | **TOTAL** | **112964** |

**அலுவலகக்குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 320 | **<u>மன்றப்பொருள் எண்.5</u>**<br><br>**இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ODF+ ஆய்விற்கு தேவையான NAPKIN VENDING MACHINE மற்றும் வாஸ்பேசன், பைப்ஹோஸ், பிட்டிங் டஸ்ட்பின் , பினாயில், ஆசிட் போன்ற அத்தியாவசிய பொருட்கள் வாங்கியதற்கான செலவுத்தொகை ரூ.30700/- மன்றத்தின் அனுமதிக்கு.**<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>**மன்றம் அனுமதிக்கலாம்.** | அனுமதிக்கப்பட்டது. |
| 321 | **<u>மன்றப்பொருள் எண்.6</u>**<br><br>**மேலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நகரளவு வார்டு பி, பிளாக் 21, நகரளவு எண்.10/5ல் உள்ள 97.20 செண்ட் இடத்தினை மனைப்பிரிவாக பிரிக்க நகர்ஊரமைப்பு துறை, மதுரை மண்டல உதவி இயக்குநர் அவர்களின் தொழில் நுட்ப உத்தரவின் படி மேற்படி மனையிடத்தில், சாலை வசதிகள், மழைநீர் வடிகால், தெருவிளக்கு, குடிநீர் விநியோகம் பகிர்மான குழாய் அமைத்தல் மற்றும் சிறுபாலங்கள் அமைப்பதற்கு இந்நகராட்சி பொறியாளரால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மனுதாரரால் மேற்படி மனையிடத்தில் அடிப்படை வசதிகள் அனைத்து செய்யப்பட்டு இந்நகராட்சிக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை பத்திரப்பதிவு செய்து நகராட்சியில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி மனைக்கு இறுதி ஒப்புதல் வழங்க மதுரை மாவட்ட நகர்ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.**<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>**மன்றம் அனுமதிக்கலாம்.**<br><br>**கோப்பு எண்.633/2023/எப்1** | அனுமதிக்கப்பட்டது. |
| 322 | **<u>மன்றப்பொருள் எண்.7</u>**<br><br>**இந்நகராட்சியில் 2021-2022ம் ஆண்டிற்கான தணிக்கை தடைகளுக்கு தயார் செய்யப்பட்ட பதிலறிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு.**<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>**மன்றம் அனுமதிக்கலாம்.** | அனுமதிக்கப்பட்டது. |

323

**<u>மன்றப்பொருள் எண்.8</u>**

மேலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் கீழ்க்கண்ட வார்டுகளில் காவேரி கூட்டுகுடிநீர் பகிர்மான குழாய் பல இடங்களில் பதிக்கப்படாமல் உள்ளது. காவேரி கூட்டுகுடிநீர் விநியோகம் இந்நகராட்சியில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் கொடுக்க வேண்டும் என்பது அரசின் திட்டமாக உள்ளது. எனவே விடுப்பட்டுள்ள பகுதிகளின் பொதுமக்களுக்கு காவேரி கூட்டுகுடிநீர் திட்டம் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதால் கீழ்க்கண்ட பகுதிகளில் பகிர்மான குழாய் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண். | பகிர்மான குழாய் விடுபட்ட பகுதி தெரு பெயர் | குடியிருப்பு மக்கள் தொகை |
|---|---|---|---|
| 1 | 1 | பழையசுக்காம்பட்டி, | 2941 |
| 2 | 1 | பல்லவராயன்பட்டி | |
| 3 | 2 | நொண்டிகோவில்பட்டி | 1005 |
| 4 | 2 | பர்மா காலனி | |
| 5 | 3 | கம்பர்தெரு | 1605 |
| 6 | 4 | வெள்ளநாதன்பட்டி | 2565 |
| 7 | 5 | நயினார் ஊரணி | 1585 |
| 8 | 10 | சொக்கம்பட்டி<br>சின்னப்பயல் ஊரணி | 1409 |
| 9 | 18 | திருவள்ளுவர் நகர் | 825 |
| 10 | 21 | மலம்பட்டி ஊரணி<br>மலம்பட்டி பெருமாள் கோவில் | 1582 |
| 12 | 24 | சின்னரசன்பட்டி | 1987 |
| 13 | 24 | கருத்தபுளியம்பட்டி | |
| 14 | 25 | தெற்குபட்டி | 640 |
| 15 | 26 | சத்யா நகர் | |
| 16 | 26 | மில்கேட் முருகன்கோவில் | 1326 |
| 17 | 27 | மில்கேட் | 1390 |
| | | | 18860 |

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 324 | **<u>மன்றப்பொருள் எண்.9</u>**<br><br>**மேலூர் நகராட்சிக்குட்பட்ட கருத்தப்புளியம்பட்டி கிராம்ம் வார்டு டி, பிளாக் 24, நகர புல எண்.300/6 இல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் ரூ.4.50இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் தூண் அமைத்து கம்பிவேலி அமைக்கும் பணிக்கு 04.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.**<br><br>**1. திரு.எஸ்.செந்தில்குமார், மேலூர் -0.09% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு**<br>**2. திரு.பி.மகேந்திரன்,மேலூர். -1.34% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்.**<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>**1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவாக வழங்கிய திரு.எஸ்.செந்தில்குமார் என்பவர் வழங்கிய ஒப்பந்தப்பள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி பணியானது வருவாய் துறைக்கு சம்பந்தமான பணியென்பதால் பணியினை விரைந்து முடித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு.எஸ்.செந்தில்குமார் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.** | அனுமதிக்கப்பட்டது. |
| 325 | **<u>மன்றப்பொருள் எண்.10</u>**<br><br>**மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23இல் அம்மன் நகரில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த சமையல்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு கூடுதலாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல், குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம், கழிவுநீர்தொட்டி, LPG இணைப்பு PVC சின்டெக்ஸ்(பிளாஸ்டிக்) தண்ணீர் தொட்டி அமைத்தல் மற்றும் நடைபாதை தளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.**<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>**1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2.மேற்படி பணியினை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண்.1042/2023/இ1** | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>326</td><td>
<u>மன்றப்பொருள் எண்.11</u>
மாவட்ட ஆட்சித்தலைவர் /பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மதுரைஅவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.2155/2022/டி2 நாள்.16.06.2023 ஆம் தேதியிட்ட கடிதத்தில், மதுரை பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022-2023இன் கீழ் தலா ரூ.5.00இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்காணும் இரண்டு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதிஅளித்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>மேலூர் நகராட்சி சேனல் ரோடு, பிள்ளையார் கோயில் பேருந்து நிறுத்தத்தில் பயணியர் நிழற்குடை அமைத்தல் .</td><td>ரூ.500000</td></tr>
<tr><td>2</td><td>மேலூர் நரகாட்சி சிவகங்கை ரோடு எம்.மலம்பட்டி விலக்கு பேருந்துநிறுத்தத்தில் பயணியர் நிழற்குடை அமைத்தல்.</td><td>ரூ.500000</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு
<ol>
<li>மன்றம் பதிவு செய்யலாம்.</li>
<li>மேற்படி பணியானது திட்டப்பணியென்பதால் உரிய கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதிபெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.</li>
</ol>
ந.க.எண்.565/2023/இ1
</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>327</td><td>
<u>மன்றப்பொருள் எண்.12</u>
மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 வாரச்சந்தை வளாக்கத்திற்குள் உள்ள நுண்ணுர உரக்கிடங்கில் தண்ணீர் தொட்டிகள் பராமரிப்பு, வயரிங் ஒர்க், பைப்லைன், கழிவுநீர்கால்வாய் அமைத்தல், சல்லடை இயந்திரம் பராமரிப்பு மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.
அலுவலகக்குறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை
</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதிக்கலாம். | |
| 328 | **மன்றப்பொருள் எண்.13**<br><br>தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு விதி எண்.110 ன் கீழ் 2023-2024, பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலைகளை மண்சாலைகளாக மாற்றும் பணிக்கு 12.07.2023 அன்றுஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>1. \| திருமதி.மகாலெட்சுமி, இடையமேலூர் \| -0.03% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு<br>2. \| M/S A.K.B.Raja Enterprises, தூத்துக்குடி \| 6.35% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்ப்நதப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.03% குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர் திருமதி.மகாலெட்சமி ,இடையமேலூர் என்பவரது விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br><br>2. மேற்படி பணியானது திட்டப்பணியென்பதால் பணியினை விரைந்து முடித்து பணிமுடிவறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்யுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் திருமதி.மகாலெட்சுமி என்பவருக்கு LOA கடிதம் வழங்கியதையும் மற்றும் வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 329 | **மன்றப்பொருள் எண்.14**<br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட கருத்தபுளியம்பட்டி கிராமம் வார்டு டி, பிளாக் 24, நகர புல எண்.291/1ல் உள்ள அரசு நிலத்தின் எல்லைகளில் ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் தூண் அமைத்து கம்பிவேலி அமைக்கும் பணிக்கு 04.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1.</td><td>திரு.எஸ்.செந்தில்குமார்<br>மேலூர்</td><td>-0.08% மதிப்பீட்டு விலை<br>விகிதத்தை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.பி.மகேந்திரன்,<br>மேலூர்</td><td>1.06% மதிப்பீட்டு விலை<br>விகிதத்தை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு
<ol>
<li>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவாக வழங்கிய திரு.எஸ்.செந்தில்குமார் என்பவர் வழங்கிய ஒப்பந்தபுள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>மேற்படி பணியானது வருவாய் துறைக்கு சொந்தமான பணியென்பதால் பணியினை விரைந்து முடித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று திரு.எஸ்.செந்தில்குமார் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>330</td>
<td>
<u>மன்றப்பொருள் எண்.15</u>
கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023-2024இன் கீழ் ரூ.128.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணிக்கு 30.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>1.</td><td>M/S A.K.B.ராஜா எண்டர்பிரைசஸ்,<br>தூத்துக்குடி</td><td>-0.04% மதிப்பீட்டு விலை<br>விகிதத்தை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஏ.எஸ்.கே.சுந்தரமூர்த்தி,<br>தூத்துக்குடி</td><td>1.84% மதிப்பீட்டு விலை<br>விகிதத்தை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு
<ol>
<li>மேற்கண்டவாறு வரப்பெற்ற இருஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.04% குறைவாக வழங்கிய M/s.A.K.B.Raja எண்டர்பிரைசஸ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>மேற்படி பணியானது திட்டப்பணியென்பதால் குறிப்பிட்ட கால அளவிற்குள் முடிக்கப்பட வேண்டியிருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று M/s.A.K.B.Raja எண்டர்பிரைசஸ் என்பவருக்கு கூடுதல் வைப்புத்தொகை செலுத்தக்கோரி LOA கடிதம் வழங்கியதையும் மற்றும்</li>
</ol>
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>பணிஉத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>331</td><td>

**<u>மன்றப்பொருள் எண்.16</u>**

**இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் 300mm dia, 300mm, 20mm dia, 100 mm dia, 90 mm dia, 80 mm dia, PVC மற்றும் GI குடிநீர் பகிர்மானம் மற்றும் விநியோக குழாய்களை பழுதுநீக்கம் செய்யும் பணியினை 30.06.2023 வரை ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ரவி என்பவர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியினை தனியார் மூலம் Outsourcing குடிநீர் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்படும் வரை நகர்மன்றத்தலைவர் , துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் பொருட்டு நடப்பில் உள்ள ஒப்பந்தப் பணியினை 01.07.2023 முதல் 30.09.2023 வரை பழைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் ஏற்கனவே பார்த்து வந்த ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள ஒப்பந்தப்பணியினை நீட்டிப்பு செய்வதற்கு ரூ.3.25 இலட்சம் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.**

**665/2022/இ1**

**அலுவலகக்குறிப்பு**

**மேற்படி பணியானது குடிநீர் சம்பந்தப்பட்ட அத்தியாவசிய பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.**

</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>332</td><td>

**<u>மன்றப்பொருள் எண்.17</u>**

**இந்நகராட்சிக்குட்பட்ட சந்தைபேட்டையில் உள்ள நுண்ணுயிர் உரக்கிடங்கில் பராமரிப்பு பணிகள் (மதிப்பீடு ரூ.4.95இலட்சம்) மேற்கொள்ள 24.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு.**

<table>
<tr><td>1.</td><td>திரு.எம்.லத்திப், ஒப்பந்ததாரர், மேலூர்</td><td>-0.26% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.எம்.அஜ்மல்கான், ஒப்பந்ததாரர், மேலூர்.</td><td>2.25% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்</td></tr>
</table>

**அலுவலகக்குறிப்பு**

1. **மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.26% குறைவாக வழங்கிய திரு.எம்.லத்திப் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.**
2. **மேற்படி பணியானது பொதுசுகாதார பணியென்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்த்தாரருக்கு**

</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். | |
| 333 | **<u>மன்றப்பொருள் எண்.18</u>**<br><br>**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சமையல் கூடத்தில் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 24.07.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கு.**<br><br>1. \| திரு.எம்.லத்திப், ஒப்பந்ததாரர், மேலூர் \| -0.05% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு<br>2. \| திரு.எம்.அஜ்மல்கான், ஒப்பந்ததாரர், மேலூர். \| 1.89% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட -0.05% குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.எம்.லத்திப் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. மேற்படி திட்டமானது விரைவில் செயல்பாட்டிற்கு வரப்படவுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 334 | **<u>மன்றப்பொருள் எண்.19</u>**<br><br>**மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, சொக்கம்பட்டி (மதுரை சாலையிலிருந்து சொக்கம்பட்டி பிரிவு)மெயின் சாலையில் குடிநீர் பகிர்மானக்குழாய் இல்லாததால் அப்பகுதியில் சீராக விநியோகிக்க சிரமமாக உள்ளது. அதனால் மேற்படி பகுதியில் குடிநீர் பகிர்மானக்குழாய் பதிக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை தொகை ரூ.0.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.**<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் நிதி2023-24ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 335 | **<u>மன்றப்பொருள் எண்.20</u>**<br><br>**மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26, மில்கேட் மேற்குபகுதியில் சிறுபாலம் இல்லாததால் சாலையை கடந்து செல்ல பொதுமக்கள் மற்றும் இரண்டு சக்கர வாகனத்தில் செல்வோர் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே மேற்படி பகுதியில் ரூ.1.00இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாலம் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு.** | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு**<br><br>**1. அனுமதி வழங்கலாம்.**<br><br>**2. மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதி 2023-2024இன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.** | |
| 336 | **<u>மன்றப்பொருள் எண்.21</u>**<br><br>**மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 பல்லவராயன்பட்டி கிழக்கு தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய் இல்லாததால் அப்பகுதியில் சீரான முறையில் குடிநீர் விநியோகிக்க சிரமாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் குடிநீர் பகிர்மானக்குழாய் பதிக்கும் பணிக்கு தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.**<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>**1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br><br>**2. மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் நிதி 2023-2024இன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.** | அனுமதிக்கப்பட்டது. |
| 337 | **<u>மன்றப்பொருள் எண்.22</u>**<br><br>**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.334 (MA-IV) நாள்.16.06.2023 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.22111/ஆர்/2021-7, நாள்.21.07.2023ன் தேதிய கடிதத்தின்படி, இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டுக்குத்தகை இனங்கள் மற்றும் கடைகளுக்கான வாடகை 01.06.2020 முதல் 31.08.2020 வரை மற்றும் 01.05.2021 முதல் 30.06.2021 வரை உள்ள மாதங்களுக்கான குத்தகைதொகை /வாடகைத்தொகையினை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு.**<br><br>**அலுவலகக்குறிப்பு.**<br><br>**மன்றம் அனுமதிக்கலாம்.** | அனுமதிக்கப்பட்டது. |
| 338 | **<u>மன்றப்பொருள் எண்.23</u>**<br><br>**இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு புதிதாக நான்கு TATA ACE வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த கோரிய ஒப்பந்தப்புள்ளி மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரை** | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **கிளையில் திரு.ஜி.ராமராமி என்பவரால் வழக்கு எண்.W.P.(MD).No.1086 of 2019 and W.P.(MD).No.4345 of 2023ன்படி தடை உத்தரவு பெறப்பட்டுள்ளதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட நான்கு வாகனங்களை இயக்கவும், பராமரிப்பு செய்யவும், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியத்தில் ஒட்டுநர் உரிமம் பெற்ற நான்கு ஓட்டுநர்களை நியமனம் செய்ய விலைப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.**<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>**பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதிய விகிதத்தின்படி விலைப்புள்ளி கோரியதையும் அதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.** | |

ஆணையாளர்,
மேலூர் நகராட்சி.